ஆசிரியரிடமிருந்து........!

# உங்களுக்குச் சமாதானம்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும் அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்'' என்றும், ''அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை'' என்றும் முன்னுரைக்கிறார் (ஏசாயா 9:6,7). மீகா என்னும் தீர்க்கதரிசியும் இயேசுவைக் குறித்து "இவரே சமாதானக் காரணர்" என்கிறார் (மீகா 5:5). ஆசாரியனாகிய சகரியா தீர்க்கதரிசனமாய், "நம்மை சந்தித்து, நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்த வந்த அருணோதயம் "இயேசு" என்று பாடுவதை வாசிக்கிறோம் (லூக்கா 1:78,79). இப்படி நமக்காக பிறந்த இயேசு, நம்முடைய வாழ்விலே சமாதானப்பிரபுவாக எவ்விதம் செயல்படுகிறார் எனவும், அவர் நமக்கு அளிக்கும் சமாதானத்தின் மகத்துவம் எத்தகையது என்பதைக் குறித்தும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மூன்று நிலைகளிலே இயேசு நமக்கு சமாதானம் அளிக்கிறார்.

## 1. உன்னத தேவனோடு சமாதானம் (UPWARD PEACE)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 5:1). நாம் தேவனுக்கு சத்துருக்களாய் இருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் (ரோமர் 5:10). நாம் எப்படி தேவனுக்கு சத்துருக்கள் ஆனோம்? ஆதாம் ஏவாள் என்னும் முதல் மனிதர்களுடைய பாவத்தினால் முழு மனுக்குலமும் பாவத்திற்குள்ளானது (ரோமர் 5:12). ஆகவேதான் தாவீது "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறுகிறார் (சங்.51:5). "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 59:2). நம் பாவத்தினால் நாம் மரணத்துக்கு பாத்திரர்களானோம் (ரோமர் 6:23). நம்முடைய பாவங்கள் நம்மை படைத்த தேவனிடம் நமக்கு இருந்த உறவையும் சமாதானத்தையும் கெடுத்து போடுகிறது. இயேசுவோ தமது பரிசுத்த இரத்தத்தை சிந்தி, நமக்கு சமாதானத்தை உண்டாக்கி, உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார் (கொலோ.1:20). மேலும் இயேசுவே நம்முடைய சமாதான காரணராகி, தேவனோடு நமக்கிருந்த பகையை சிலுவையினால் கொன்று, நம்மை புதிய மனுஷராக்கி, சமாதானம்பண்ணி, தேவனுடன் நம்மை ஒப்புரவாக்கினார் (எபே. 2:14-16).

பாவம் நம் சமாதானத்தை கொள்ளையாடிவிடும். "துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை" (ஏசாயா 48:22; 57:21). பாவிகளின் வாழ்வு சமாதானமின்றி கொந்தளிக்கிற கடல்போல் இருக்கும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 57:20). அநேக பாவங்களினால் சமாதானம் இழந்து தவித்த ஒரு பெண், இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அவரிடம் மன்னிப்பு பெற வேண்டி அவரை தேடி வந்தாள். இயேசு

அவளை நோக்கி, “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது; சமாதானத்தோடே போ” என்றார் (லூக்கா 7:37,48,50). உன்னத தேவனோடு நம்மை ஒப்புராக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தேவனோடுள்ள சமாதானத்தை இழந்து தவிக்கிறீர்களோ? இன்றே உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பி, இயேசுவின் இரத்தம் அருளும் மன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

## 2. உள்ளத்தில் சமாதானம்
## (INWARD PEACE)

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக”. “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக” என்று இயேசு கூறுகிறார் (யோவான் 14:1,27). பயங்களும், கவலைகளும் உள்ளத்தின் சமாதானத்தை கெடுக்கிறது. உலகம் தரும் சமாதானம் நிலையற்றது. ஆனால் இயேசுவோ நம் உள்ளத்தை கலங்கச் செய்யும் பயங்களையும் கவலைகளையும் முற்றிலும் நீக்கிவிடுகிறார். இது எப்படி நடக்கும்? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து அவரை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும். “உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்” என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 26:3). பூரண சமாதானம் என்றால் நிலையான, எப்பொழுதும் நிலைத்திருக்கும் சமாதானம் ஆகும். தேவன் தம்மை முழுமையாய் நம்பி, பற்றிக் கொள்கிறவர்களுக்கு தெய்வீக பாதுகாவலையும், பராமரிப்பையும் நிரந்தரமாக வழங்குகிறார் என்பதே இதன் பொருள்.

நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் தேவனிடத்தில் நம் உள்ளத்தை ஊற்றிவிடும்போது, அவருடைய பூரண சமாதானம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ளும் என்று பவுல் கூறுகிறார் (பிலி.4:6,7). 12 வருடகாலமாக பெரும்பாடு என்னும் நோயினால் அவதியுற்று, அனைத்தையும் செலவழித்தும் சுகமின்றி, சமாதானமின்றி தவித்த ஒரு பெண் இயேசுவை முழுமையாக விசுவாசித்தபோது அற்புத சுகமும், சமாதானமும் பெற்றாள் (லூக்கா 8:43-48). யூதரைக் குறித்த பயத்தினால் கலங்கியிருந்த அப்போஸ்தலருக்கு இயேசு சமாதானம் தந்து தேற்றினார் (யோவான் 20:19,21,26). மீதியானியரால் தாக்கப்படுவோம் என்று அஞ்சி வாழ்ந்த கிதியோனுக்கு “சமாதான கர்த்தராக” (யெகோவா ஷாலோம்) தரிசனமாகி அவனை திடப்படுத்தினார் (நியா.6:23,24). இன்றே உங்கள் உள்ளத்தை கலங்கச் செய்யும், பயங்களையும், கவலைகளையும் சமாதானப்பிரபுவாகிய இயேசுவிடம் ஒப்படைத்து, அவர் தரும் தெய்வீக பூரண சமாதானத்தை உள்ளத்தில் பெற்று மகிழுங்கள்.

## 3. உறவுகளில் சமாதானம்
## OUTWARD PEACE

உன்னத தேவனோடும், உள்ளத்திலும் மட்டும் அல்ல; நம் உறவுகளிலும் நமக்கு சமாதானத்தைத் தர இயேசு விரும்புகிறார். “கூடுமானால் உங்களால் ஆன

மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது (ரோமர் 12:18; எபி.12:14). இன்று பல குடும்பங்களிலே சமாதானம் இன்றி வன்முறை நிலவுகிறது. கணவன் மனைவிக்கிடையே சமாதானமின்றி விவாகரத்துகள் பெருகியுள்ளது. உறவுகளிலே சமாதானமின்றி போவதற்குக் காரணம் அன்பின்மையும், அகம்பாவமும் (Ego), மன்னியாமையுமே. இயேசு நம்மீது வைத்த நிபந்தனையற்ற அன்பினாலே தாம் தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாகி, மரணபரியந்தம் கீழ்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று வாசிக்கிறோம் (பிலிப்பியர் 2:6-8). மேலும் இயேசு முந்தி நம்மில் அன்புகூர்ந்து, நாம் பாவிகளா யிருக்கையில் நமக்காக சிலுவையில் மரித்து, தம்முடைய நிபந்தனையற்ற அன்பை விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8).

இயேசுவை பின்பற்றும் நம்மிடம் இப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தையும், நிபந்தனையற்ற அன்பும் இருக்குமாயின் நமது உறவுகளில் சமாதானம் உண்டாகும். இயேசு நம்முடைய சமாதான காரணராய் இருந்து பகையாகிய நடுச்சுவரை தகர்த்து போடுகிறார் (எபே.2:14). இயேசு கூறிய கெட்டக்குமாரனைப் பற்றிய உவமையை லூக்கா 15:10-24 வசனங்களில் வாசிக்கிறோம். ஆணவத்தினால் தன் தந்தையை விட்டுபிரிந்து சென்ற இளையமகன், தனது தவறை உணர்ந்தவனாய், மனம்வருந்தி, தாழ்மையுடன் தன் தந்தையிடன் மன்னிப்பு கோர வருவதையும், அவன் கேட்கும் முன்னரே அவன் தந்தை தனது நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தி அவன் செய்த குற்றத்தை மன்னிப்பதையும் பார்க்கிறோம். இத்தகைய அன்பும், தாழ்மையும், மன்னித்தலுமே உறவுகளிலே நிலையான சமாதானத்தையும், அந்நியோந்நியத்தையும் கொண்டு வரும். இன்று உங்கள் உடைந்த உறவுகளையும், நீங்கள் இழந்து போன உறவுகளையும் எண்ணி கண்ணீர் வடிக்கிறீர்களோ? கவலைப்படாதீர்கள். நீங்கள் அன்புடனும், தாழ்மையுடனும் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் தயாராக இருப்பீர்களானால், உங்கள் உறவின் விரிசல்களை சரி செய்யவும், நீங்கள் இழந்த உறவுகளை மீட்டுத்தரவும் இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கும் நமது பிதாவாகிய தேவன் சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33; எபிரெயர் 13:20). குமாரனாகிய இயேசு சமாதானப்பிரபு மற்றும் சமாதானக்காரணர் (ஏசாயா 9:6; மீகா 5:5). பரிசுத்த ஆவியானவரும் கூட சமாதானத்தின் ஆவியானவரே ஆவார் (எபே.4:3). தேவன் நமக்கு அருளியுள்ள வேதமும் சமாதானத்தின் சுவிசேஷமே (அப்.10:36; எபே.6:15). கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் என்று வேதம் கூறுகிறது (சங்.29:11). ஆகவே அன்புக்குரியவர்களே, இயேசு கிறிஸ்துவின் பூரண சமாதானம் உங்கள் வாழ்வில் நிறைந்து, பெருகுவதாக!

சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும்
உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக.
கர்த்தர் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பாராக (2 தெச. 3:16)!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி